நீதித்துறை நடுவர் நீதிமன்றம், மேலூர்

முன்னிலை: செல்வி.த.தென்றல் முத்து, **L.L.M.,**

நீதித்துறை நடுவர், மேலூர்

**2026-**ஆம் ஆண்டு மார்ச் மாதம் **25-**ஆம் நாள் புதன்கிழமை

ஆண்டுப்பட்டிகை வழக்கு எண்**.120/2018**

**CNR.No.: TNMD16-000866-2018**

...

| | | |
|---|---|---|
| குற்றம் முறையிடுபவர் | : | அரசுக்காக காவல் ஆய்வாளர்<br>கொட்டாம்பட்டி காவல்நிலையம்<br>குற்ற எண்.324/2013 |
| குற்றம் சாட்டப்பட்டவர்கள் | : | 1) கோவிந்தராஜ், (வயது 57/2026)<br>த/பெ.திருநாவுக்கரசு,<br>அய்யனார் காலனி, கொட்டாம்பட்டி.<br><br>2) தங்கராஜ், (வயது 37/2026)<br>த/பெ.கோவிந்தராஜ்,<br>அய்யனார் காலனி, கொட்டாம்பட்டி.<br><br>3) ஜோதி, (51/2026)<br>க/பெ.கோவிந்தராஜ்,<br>அய்யனார் காலனி, கொட்டாம்பட்டி.<br><br>4) தங்கமீனாள்,<br>க/பெ.கோவிந்தராஜ்,<br>அய்யனார் காலனி, கொட்டாம்பட்டி.<br><br>5) நந்தினி,<br>க/பெ.பன்னீர்செல்வம்<br>அய்யனார் காலனி, கொட்டாம்பட்டி.<br><br>6) மஞ்சுளா, (வயது 50/2026)<br>க/பெ.சின்னகருப்பு<br>மந்தை தெற்கு தெரு,<br>கொட்டாம்பட்டி. |
| குற்றம் முறையிடப்பட்டது | : | 1 முதல் 6 எதிரிகள் மீது இ.த.ச பிரிவுகள் 147, 148, 294(பி), 324, 506(2) r/w 4 of TNPHW Act. |
| குற்றம் வனையப்பட்டது | : | 1 முதல் 6 எதிரிகள் மீது இ.த.ச பிரிவுகள் 147, 148, 294(பி), 324, 506(2) r/w 4 of TNPHW Act-ன் கீழ் குற்றச்சாட்டுக்கள் |

THENDRAAL MUTHU DAKSNAMOORTHY

Digitally signed by THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Date: 2026.03.25 08:00:20 +0530

| | | |
|---|---|---|
| | | வனையப்பட்டுள்ளன. |
| எதிரிகள் காவலுக்கு உட்படுத்தப்பட்டநாள் | : | A1 to A3 & A6 : 01.10.2013<br>A4 & A5 obtained anticipatory bail in CRL.OP(MD) No.17245 of 2013, dated 04.10.2013 as per the order of the Hon'ble Madurai Bench of Madras High Court. |
| இறுதி அறிக்கை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்த நாள் | : | 15.05.2018 |
| பல்வகை மனு மற்றும் அதன் முடிவு | : | U/s.70(2) Cr.P.C Warrant recall = Allowed. |
| முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை நாள் | : | |

| | Chief | Cross |
|---|---|---|
| PW1 | 12.10.2021 | 12.10.2021 |
| PW2 | 12.10.2021 | 12.10.2021 |
| PW3 | 12.10.2021 | 12.10.2021 |
| PW4 | 12.10.2021 | 12.10.2021 |
| PW5 | 12.10.2021 | 12.10.2021 |
| PW6 | 12.10.2021 | 12.10.2021 |
| PW7 | 20.11.2024 | 20.11.2024 |
| PW8 | 30.12.2024 | 30.12.2024 |
| PW9 | 04.02.2026 | Nil |

| | | |
|---|---|---|
| குற்றவியல் விசாரணை முறைச்சட்டம் பிரிவு 313(1) (ஆ)-ன் கீழ் எதிரிகளை விசாரித்த நாள் | : | 04.03.2026 |
| தலைமறைவான எதிரியின் விபரம் மற்றும் ஆஜர் செய்யப்பட்ட விபரம் | : | Nil |
| மேல் நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட இடைக்கால தடை மற்றும் அதன் முடிவு விபரம் | : | Nil |
| தீர்மானம் | : | 1 முதல் 6 எதிரிகள் மீது இ.த.ச பிரிவுகள் 147, 148, 294(பி), 324, 506(2) r/w 4 of TNPHW Act-ன் கீழ் குற்றவாளிகள் இல்லை என்று தீர்மானம். |
| தீர்ப்பு | : | முடிவாக, 1 முதல் 6 எதிரிகள் மீது இ.த.ச பிரிவுகள் 147, 148, 294(பி), 324, 506(2) r/w 4 of TNPHW Act-ன் கீழ் |

THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Digitally signed by THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Date: 2026.03.25 08:00:24 +0530

சுமத்தப்பட்டுள்ள குற்றங்கள் அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்படவில்லை என்று தீர்மானித்து, சந்தேகத்தின் பலனை 1 முதல் 6 எதிரிகளுக்கு அளித்து அவர்கள் குற்றவாளிகள் இல்லை என இந்நீதிமன்றம் முடிவு செய்து, குவிமுச பிரிவு 248(1)-ன் கீழ் 1 முதல் 6 எதிரிகளை விடுதலை செய்து, இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது. இவ்வழக்கில் வழக்கு சொத்துக்கள் எதுவும் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. அதனால் அது பற்றி உத்தரவு எதுவும் பிறப்பிக்கவில்லை. மேலும் 1 முதல் 6 எதிரிகள் குவிமுச பிரிவு 437(A)-ன் கீழ் எழுதிக்கொடுத்துள்ள பிணைப்பத்திரம் 6 மாதங்கள் முடிவடைந்த பின்பு தானாக ரத்தாகிவிடும்.

இவ்வழக்கானது கடந்த 20.06.2018-ம் தேதியன்று கோப்பிற்கு எடுக்கப்பட்டு 11.03.2026 அன்று என் முன்னர் இறுதி விசாரணைக்கு வந்த போது அரசு தரப்பில் அரசு குற்றத்துறை உதவி வழக்குரைஞர் நிலை-2 அவர்கள் ஆஜராகியும், 1 முதல் 6 எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.A.கணேஷ் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டும், சாட்சி மற்றும் சான்றாவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டும், இதுநாள்வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்த இவ்வழக்கில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

<u>தீர்ப்புரை :-</u>

1 முதல் 6 எதிரிகள் மீது இ.த.ச பிரிவுகள் 147, 148, 294(பி), 324, 506(2) r/w 4 of TNPHW Act-ன் கீழ் குற்றச்சாட்டுக்கள் வனையப்பட்டுள்ளன.

**1)** <u>குற்ற இறுதி அறிக்கையின் சுருக்கம்</u> **:**

கடந்த 30.09.2013-ம் தேதி காலை 6.30 மணிக்கு கொட்டாம்பட்டி அய்யனார் காலனி, வீட்டின் முன்பு நின்றுகொண்டிருந்தபோது ஏற்கனவே கடந்த பஞ்சாயத்து தேர்தலில் மேற்படி சாட்சிகளின் தரப்பினருக்கும், எதிரிகள் தரப்பினருக்கும் முன்விரோதம் இருந்து வந்தநிலையில் சாட்சி-1 தனது வீட்டிற்கு தண்ணீர் வரவில்லை என்று சத்தம் போட்டதால், சாட்சி-1 வீட்டின் அருகில் 1 முதல் 6 எதிரிகள் ஒன்று கூடி சாட்சிகளை பார்த்து ஏண்ட

THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Digitally signed by THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Date: 2026.03.25 08:00:29 +0530

தேவிடியாள்களா இங்கு வந்து சத்தம் போடுறீங்க என பொதுமக்களின் பார்வைக்குட்பட்டு அவதூறான வார்த்தைகளால் பேசியும், 4-ம் எதிரி தங்கமீனாள் கட்டையை கொண்டு சாட்சி-1ன் தலையில் அடித்து சிறுகாயத்தையும், 3-ம் எதிரி ஜோதி செங்கல் கல்லை கொண்டு சாட்சி-1ன் மீது அடித்து சிறுகாயத்தையும், 5, 6 எதிரி கருங்கல்லை கொண்டு சாட்சிகள் 1, 2, 3-ன் மீது எறிந்து சிறுகாயத்தை ஏற்படுத்தியும், 1, 2, 4 எதிரிகள் சாட்சி-1ஐ பெண் என்றும் பாராமல் சேலையை பிடித்து இழுத்து பெண்மைக்கு நாணம் மற்றும் மனஉளைச்சல் ஏற்படுத்தியும், 1, 2, 4 எதிரிகள் சாட்சி-1ஐ பார்த்து கொலைமிரட்டல் விடுத்த குற்றம் புரிந்துள்ளார்கள் என்று கொட்டாம்பட்டி காவல் நிலைய சார்பு ஆய்வாளர் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**2)** இவ்வழக்கு ஆண்டுப்பட்டிகை எண்.120/2018-ஆக இந்நீதிமன்ற கோப்புக்கு எடுக்கப்பட்டு இவ்வழக்கின் 1 முதல் 6 எதிரிகளுக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டது. இவ்வழக்கின் 1 முதல் 6 எதிரிகள் அழைப்பாணையின் பேரில் நீதிமன்றத்தில் முன்னிலையானவுடன் குவிமுச பிரிவு 207-ன் கீழ் 1 முதல் 6 எதிரிகளுக்கு வழக்கு ஆவணங்கள் அனைத்தும் இலவசமாக வழங்கி, போதிய அவகாசம் கொடுத்து, 1 முதல் 6 எதிரிகள் மீது இ.த.ச பிரிவுகள் 147, 148, 294(பி), 324, 506(2) r/w 4 of TNPHW Act-ன் கீழ் குற்றச்சாட்டுக்கள் வனையப்பட்டுள்ளது. மேற்படி குற்றச்சாட்டுக்களுக்கு போதிய முகாந்திரம் இருந்ததால் 01.09.2021 அன்று 1 முதல் 6 எதிரிகள் மீது குற்றச்சாட்டுகள் வனைந்து தமிழில் வாசித்து விளக்கி கேட்டபோது 1 முதல் 6 எதிரிகள் குற்றத்தை மறுத்துரைத்துள்ளார்கள். எனவே வழக்கு அரசு தரப்பு சாட்சிக்காக ஒத்திவைக்கப்பட்டது.

**3)** அரசு தரப்பில் அ.சா.1 முதல் 9 வரையிலான சாட்சிகள் விசாரணை செய்யப்பட்டு, அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.7 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. இவ்வழக்கில் சான்று பொருட்கள் எதுவும் கைப்பற்றப்படவில்லை. வழக்கு விசாரணையின் போது, அ.சா.1-ன் மூலம் அ.சா.ஆ.1-ம், அ.சா.5-ன் மூலம் அ.சா.ஆ.2-ம், அ.சா.6-ன் மூலம் அ.சா.ஆ.3-ம், அ.சா.7-ன் மூலம் அ.சா.ஆ.4 முதல் அ.சா.ஆ.6-ம், அ.சா.8-ன் மூலம் அ.சா.ஆ.7 ஆவணங்களும் குறியீடு செய்யப்பட்டுள்ளன. 1 முதல் 6 எதிரிகள் தரப்பில் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை.

**4) அரசு தரப்பில் சாட்சிகளின் சாட்சியத்திலிருந்து தெரியவரும் வழக்கின் சுருக்கம் :-**

**4.1)** அ.சா.1 ஜோதி தனது சாட்சியத்தில் தனக்கு எதிரிகளை தெரியும் என்றும், அவர்கள் தங்கள் எதிர்வீட்டில் குடியிருந்து வருகிறார்கள் என்றும், கடந்த 2013-ம் வருடம்

THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Digitally signed by THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Date: 2026.03.25 08:00:34 +0530

காலை சுமார் 9 மணியளவில் தங்கள் வீட்டு வாசல் முன்பாக தானும், சோலைமீனா மற்றும் பிரியா ஆகியோர்கள் இருந்தபோது எதிரி ஜோதி தேவடியா, மூக்கரச்சி என்று அசிங்கமாக பேசினார் என்றும், தங்கமீனாள் என்பவர் கட்டையால் தன் தலையில் அடித்தார் என்றும், 1-வது எதிரி தங்கராஜ் சம்பவ இடத்தில் வைத்து சேலையை பிடித்து இழுத்தார் தான் கீழே விழுந்துவிட்டார் என்றும், மற்ற எதிரிகளும் கட்டையை வைத்து அடித்தும், செங்கல்லால் எறிந்தார்கள் என்றும், தனக்கு உடம்பில் ஊமைக்காயங்கள் இருந்தது என்றும், தன் மருமகள் சோலைமீனா என்பவருக்கு தலை உடைந்து இரத்தக்காயமானது என்றும், தன் மகள் பிரியாவிற்கும் தலை உடைந்து இரத்தக்காயமானது என்றும், பிறகு தாங்கள் காவல்நிலையம் சென்று புகார் கொடுத்தார்கள் என்றும், தன்னிடம் காட்டப்படும் அ.சா.ஆ.1 புகார் தான் கொடுத்தது தான் என்றும், அதில் உள்ள கையெழுத்து தன்னுடையது தான் என்றும், தானும், தன் மருமகளும் சுமார் 25 நாட்கள் உள்நோயாளியாக சிகிச்சை எடுத்துக்கொண்டார்கள் என்றும், தன் மகள் ஒரு வாரம் உள்நோயாளியாக சிகிச்சை எடுத்துக்கொண்டார் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

**4.2)** அ.சா.2 பிரியா தனது சாட்சியத்தில் அ.சா.1 தன் அம்மா என்றும், எதிரிகளை தனக்கு தெரியும் என்றும், அவர்கள் தங்கள் எதிர்வீட்டில் குடியிருந்து வருகிறார்கள் என்றும், கடந்த 30.09.2013-ம் தேதி காலை சுமார் 6 மணியளவில் தங்கள் வீட்டின் முன்பாக தானும், தன் அம்மா அ.சா.1 மற்றும் தன் அண்ணன் மனைவி சோலைமீனா ஆகியோர்கள் இருந்தபோது தங்கமீனாள் என்பவர் கம்பை வைத்து தங்கள் மூவரையும் தலையில் அடித்து இரத்தக்காயத்தை ஏற்படுத்தினார் என்றும், அவர் தங்களை பார்த்து தேவிடியா என்று தகாத வார்த்தை சொல்லி அடித்தார் என்றும், எதிரி ஜோதி செங்கல்லை எடுத்து தங்கள்மீது எறிந்தார் என்றும், எதிரிகள் நந்தினி மற்றும் மஞ்சுளா இருவரும் தகாத வார்த்தைகளால் பேசி, கம்பை வைத்து தங்களை அடித்தார்கள் என்றும், எதிரிகள் தங்கராஜ் மற்றும் கோவிந்தராஜ் இருவரும் தன் அம்மாவை அடித்து, சேலையை உருவி அசிங்கப்படுத்தினார்கள் என்றும், பின்னர் உங்களை இருக்கவிடமாட்டோம், சாகடித்துவிடுவோம் என்றும் தகாத வார்த்தைகளால் பேசி சென்றார்கள் என்றும், பின்னர் தன் அம்மா காவல்நிலையம் சென்று புகார் கொடுத்தார் என்றும், பின்னர் தாங்கள் மூவரும் ராஜாஜி மருத்துவமனையில் உள்நோயாளியாக 15 நாட்கள் சிகிச்சை எடுத்துக்கொண்டார்கள் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

**4.3)** அ.சா.3 சோலைமீனா தனது சாட்சியத்தில் அ.சா.1 தன் மாமியார் என்றும், எதிரிகளை தனக்கு தெரியும் என்றும், அவர்கள் தங்கள் எதிர்வீட்டில் குடியிருந்து

THENDRAAL MUTHU DAKSNAMOORTHY

Digitally signed by THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Date: 2026.03.25 08:00:38 +0530

வருகிறார்கள் என்றும், கடந்த 30.09.2013-ம் தேதி காலை சுமார் 6 மணிக்குமேல் தங்கள் வீட்டின் முன்பாக தானும், தன் மாமியார் மற்றும் தன் நாத்தனார் அ.சா.2 ஆகியோர்கள் இருந்தபோது தங்கமீனாள் என்பவர் கம்பை வைத்து தன் மாமியாரை அடித்தார் என்றும், தன் மாமியாருக்கு தலையில் காயமிருந்தது என்றும், எதிரி ஜோதி செங்கல்லை வைத்து அ.சா.2-ன் தலையில் அடித்து காயம் ஏற்பட்டது என்றும், எதிரிகள் மஞ்சுளா மற்றும் நந்தினி ஆகிய இருவரும் கட்டையால் தங்கள் மூவரையும் அடித்தார்கள் என்றும், எதிரிகள் அனைவரும் அசிங்கமாக பேசியும், 1-வது எதிரி கோவிந்தராஜ் தன் மாமியாரின் சேலையை பிடித்து இழுத்து அசிங்கப்படுத்தினார் என்றும், மேலும் எதிரி தங்கராஜ் என்பவரும் அசிங்கமாக பேசி தங்களை அடித்தார் என்றும், தனக்கு தலையில் பெரிய காயம் ஏற்பட்டு தையல் போடப்பட்டுள்ளது என்றும், பின்னர் மதுரை அரசு மருத்துவமனையில் உள்நோயாளியாக சேர்ந்து தான் 15 நாட்களும், அ.சா.1 மற்றும் அ.சா.2 14 நாட்கள் உள்நோயாளியாக சிகிச்சை எடுத்துக்கொண்டனர் என்றும், சிகிச்சையிலிருந்தபோது தன் மாமியாரை போலீசார் தன் கணவர் காயம்பட்டு சீரியசாக இருப்பதாக சொல்லி வென்பிளானுடன் வலுக்கட்டாயமாக அழைத்துச் சென்றுவிட்டனர் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

**4.4)** அ.சா.4 நாகம்மாள் தனது சாட்சியத்தில் அ.சா.1-ஐ தனக்கு தெரியும் என்றும், எதிரிகளை தனக்கு தெரியும் என்றும், சம்பவம் பற்றி தனக்கு எதுவும் தெரியாது என்றும், சண்டையை தான் நேரில் பார்த்து விலக்கிவிடவில்லை என்றும், போலீசார் விசாரித்தபோது தனக்கு தெரியாது என்று சொன்னார் என்றும் சாட்சியம் அளித்து பிறழ் சாட்சி ஆகியுள்ளார்.

**4.5)** அ.சா.5 சதாசிவம் தனது சாட்சியத்தில் தன்னிடம் காட்டப்படும் அ.சா.ஆ.2 பார்வை மகஜரிலுள்ள 1-வது கையெழுத்து தன்னுடையது தான் என்றும், சுமார் 2 வருடங்களுக்கு முன்பு கொட்டாம்பட்டி காவல்நிலையத்தில் வைத்து போலீசார் கையெழுத்து கேட்டதன்பேரில் தான் கையெழுத்து செய்தார் என்றும் சாட்சியம் அளித்து பிறழ் சாட்சி ஆகியுள்ளார்.

**4.6)** அ.சா.6 வடிவேல் தனது சாட்சியத்தில் தன்னிடம் காட்டப்படும் அ.சா.ஆ.3 பார்வை மகஜரிலுள்ள 2-வது கையெழுத்து தன்னுடையது தான் என்றும், சுமார் 4, 5 வருடங்களுக்கு முன்பு கொட்டாம்பட்டி மந்தை அருகே தாங்கள் வேலைக்கு சென்றுவிட்டு திரும்ப வந்துகொண்டிருந்தபோது போலீசார் விசாரிக்க வந்ததற்காக சாட்சியாக கையெழுத்து கேட்டதன்பேரில் தான் கையெழுத்து செய்தார் என்றும் சாட்சியம் அளித்து பிறழ் சாட்சி ஆகியுள்ளார்.

THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Digitally signed by THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Date: 2026.03.25 08:00:43 +0530

**4.7)** அ.சா.7 வேலுச்சாமி தனது சாட்சியத்தில் கடந்த 30.09.2013-ம் தேதி கொட்டாம்பட்டி காவல்நிலையத்தில் சிறப்பு சார்பு ஆய்வாளராக பணியிலிருந்த போது ஜோதி என்பவர் கொடுத்த புகாரை பெற்று நிலைய குற்ற எண்.324/2013, இ.த.ச பிரிவுகள் 147, 148, 324, 294(பி), 506(2) மற்றும் 4 of TNPHW Act-ன் கீழ் வழக்கு பதிவு செய்தார் என்றும், அந்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.4 என்றும், முதல் தகவல் அறிக்கையை நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்து ஒரு நகலை தனது விசாரணைக்கு எடுத்துக்கொண்டு அன்றைய தினமே காலை சுமார் 9.00 மணியளவில் சம்பவ இடம் சென்று சாட்சிகள் சதாசிவம், வடிவேல் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு அ.சா.ஆ.5 பார்வை மகஜர் மற்றும் அ.சா.ஆ.6 மாதிரி வரைபடம் தயார் செய்தார் என்றும், பின்னர் பார்வை மகஜர் சாட்சிகள் மற்றும் பிரியா, சோலை, மீனா, நாகம்மாள், பூபதி ஆகியோர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார் என்றும், கடந்த 01.10.2013-ம் தேதி 14.00 மணிக்கு எதிரிகள் கோவிந்தராஜ், தங்கராஜ், ஜோதி, மஞ்சுளா ஆகியோர்களை கைது செய்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினார் என்றும், பின்னர் வழக்கு கோப்பை சார்பு ஆய்வாளரிடம் ஒப்படைத்தார் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

**4.8)** அ.சா.8 பிரேம்சந்திரன் தனது சாட்சியத்தில் கடந்த 20.12.2013-ம் தேதி கொட்டம்பட்டி காவல்நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணியில் இருந்தபோது கொட்டாம்பட்டி காவல்நிலைய குற்ற எண்.324/2013 இ.த.ச பிரிவுகள் 147, 148, 324, 294(பி), 506(2) மற்றும் 4 of TNPHW Act-ன் கீழ் பதிவு செய்யப்பட்ட வழக்கில் தான் தனது புலன்விசாரணைக்கு எடுத்துக்கொண்டு சம்பவ இடம் சென்று சாட்சிகளை விசாரித்தார் என்றும், வழக்கில் காயம்பட்ட ஜோதிக்கு சிகிச்சை அளித்த மருத்துவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார் என்றும், காயச்சான்று அ.சா.ஆ.7 என்றும், இத்துடன் தனது புலன்விசாரணை முடித்து 1, 2 எதிரிகள் மீது இ.த.ச பிரிவுகள் 147, 148, 294(பி), 506(2) மற்றும் 4 of TNPHW Act-ன் கீழும், 3 முதல் 5 எதிரிகள் இ.த.ச பிரிவுகள் 147, 148, 324, 294(பி), 506(2)-ன் கீழும், 20.12.2013-ம் தேதியன்று குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தார் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

**4.9)** அ.சா.9 பூபதி தனது சாட்சியத்தில் சம்பவத்தை பற்றி தனக்கு எதுவும் தெரியாது என்றும், அ.சா.1-ஐ தனக்கு தெரியாது என்றும், எதிரியை தனக்கு தெரியாது என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

THENDRAAL MUTHU DAKSNAMOORTHY

Digitally signed by THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Date: 2026.03.25 08:00:48 +0530

**5)** <u>குற்றவியல் விசாரணை சட்டப்பிரிவு **313(1)(ஆ)-**ன் கீழான விசாரணை</u>

அரசு தரப்பு சாட்சிகள் முடிக்கப்பட்டதற்கு பின்னால் பதிவு செய்யப்பட்ட சாட்சிகளின் விசாரணையிலிருந்து குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு பாதகமாக தோன்றும் சங்கதிகளை குறித்து கு.வி.மு.ச பிரிவு 313(1)(ஆ)-ன் கீழ் குற்றம்சாட்டப்பட்டவர்களிடம் எடுத்துக்கூறி விளக்கி வினவியபோது 1 முதல் 6 எதிரிகள் பொய் சாட்சியம் என்று அரசு தரப்பு சாட்சிகளை மறுத்துவிட்டார்கள். மேலும் அவர்கள் தரப்பில் சாட்சிகள் உண்டா என வினவியபோது சாட்சிகள் இல்லை என்று சொன்னார்கள். அதனால் 1 முதல் 6 எதிரிகள் தரப்பில் சாட்சிகள் இல்லை என்று சாட்சியம் முடிக்கப்பட்டுள்ளது.

<u>**6)** அரசு தரப்பு வாதம் பின்வருமாறு**:**</u>

அரசு தரப்பில் கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் தன்னுடைய வாதத்தில் அரசு தரப்பில் முன்னிறுத்தப்பட்ட சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் 1 முதல் 6 எதிரிகள் தான் குற்றம் புரிந்துள்ளார்கள் என்று சந்தேகத்திற்கு இடமின்றி அரசு தரப்பில் நிரூபணம் செய்யப்பட்டுள்ளதாகவும், 1 முதல் 6 எதிரிகள் மீது உள்ள குற்றச்சாட்டுகளை நிரூபிக்கும் வகையில் அமைந்துள்ளதாகவும், எனவே 1 முதல் 6 எதிரிகளுக்கு தக்க தண்டனை வழங்குமாறு எடுத்துரைத்தார்.

<u>**7) 1** முதல் **6** எதிரிகள் தரப்பில் வாதம் பின்வருமாறு**:**</u>

1 முதல் 6 எதிரிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் இவ்வழக்கில் அரசு தரப்பில் முன்னிறுத்தப்பட்ட சாட்சிகளின் சாட்சியங்கள் அரசு தரப்பு வழக்கை உறுதிபடுத்தும் வகையில் இல்லை என்றும், எனவே 1 முதல் 6 எதிரிகள் மீது உள்ள குற்றம் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்படவில்லை என்றும், சந்தேகத்தின் பலனை 1 முதல் 6 எதிரிகளுக்கு வழங்கி 1 முதல் 6 எதிரிகளை விடுதலை செய்ய வேண்டும் என்று வாதிட்டார்.

<u>**8)** தீர்வு</u> **:-**

இரு தரப்பு வாதங்களும் கேட்கப்பட்டது. அனைத்து வழக்காவணங்களும் பரிசீலனை செய்யப்பட்டது.

**9)** அரசு தரப்பு வழக்குப்படி, கடந்த 30.09.2013-ம் தேதி காலை 6.30 மணிக்கு கொட்டாம்பட்டி அய்யனார் காலனி, வீட்டின் முன்பு நின்றுகொண்டிருந்தபோது ஏற்கனவே கடந்த பஞ்சாயத்து தேர்தலில் மேற்படி சாட்சிகளின் தரப்பினருக்கும், எதிரிகள் தரப்பினருக்கும் முன்விரோதம் இருந்து வந்தநிலையில் சாட்சி-1 தனது வீட்டிற்கு தண்ணீர் வரவில்லை என்று

THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Digitally signed by THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Date: 2026.03.25 08:00:52 +0530

சத்தம் போட்டதால், சா்டசி-1 வீட்டின் அருகில் 1 முதல் 6 எதிரிகள் ஒன்று கூடி சாட்சிகளை பார்த்து ஏண்ட தேவிடியாள்களா இங்கு வந்து சத்தம் போடுறீங்க என பொதுமக்களின் பார்வைக்குட்பட்டு காமதூரான வார்த்தைகளால் பேசியும், 4-ம் எதிரி தங்கமீனாள் கட்டையை கொண்டு சாட்சி-1ன் தலையில் அடித்து சிறுகாயத்தையும், 3-ம் எதிரி ஜோதி செங்கல் கல்லை கொண்டு சாட்சி-1ன் மீது அடித்து சிறுகாயத்தையும், 5, 6 எதிரி கருங்கல்லை கொண்டு சாட்சிகள் 1, 2, 3-ன் மீது எறிந்து சிறுகாயத்தை ஏற்படுத்தியும், 1, 2, 4 எதிரிகள் சாட்சி-1ஐ பெண் என்றும் பாராமல் சேலையை பிடித்து இழுத்து பெண்மைக்கு நாணம் மற்றும் மனஉளைச்சல் ஏற்படுத்தியும், 1, 2, 4 எதிரிகள் சாட்சி-1ஐ பார்த்த கொலைமிரட்டல் விடுத்த குற்றம் என்பது அரசு தரப்பு வழக்காகும்.

**10)** அ.சா.1 ஜோதி தனது சாட்சியத்தில் தனக்கு எதிரிகளை தெரியும் என்றும், அவர்கள் தங்கள் எதிர்வீட்டில் குடியிருந்து வருகிறார்கள் என்றும், கடந்த 2013-ம் வருடம் காலை சுமார் 9 மணியளவில் தங்கள் வீட்டு வாசல் முன்பாக தானும், சோலைமீனா மற்றும் பிரியா ஆகியோர்கள் இருந்தபோது எதிரி ஜோதி தேவடியா, மூக்கரச்சி என்று அசிங்கமாக பேசினார் என்றும், தங்கமீனாள் என்பவர் கட்டையால் தன் தலையில் அடித்தார் என்றும், 1-வது எதிரி தங்கராஜ் சம்பவ இடத்தில் வைத்து சேலையை பிடித்து இழுத்தார் தான் கீழே விழுந்துவிட்டார் என்றும், மற்ற எதிரிகளும் கட்டையை வைத்து அடித்தும், செங்கல்லால் எறிந்தார்கள் என்றும், தனக்கு உடம்பில் ஊமைக்காயங்கள் இருந்தது என்றும், தன் மருமகள் சோலைமீனா என்பவருக்கு தலை உடைந்து இரத்தக்காயமானது என்றும், தன் மகள் பிரியாவிற்கும் தலை உடைந்து இரத்தக்காயமானது என்றும், பிறகு தாங்கள் காவல்நிலையம் சென்று புகார் கொடுத்தார்கள் என்றும், தன்னிடம் காட்டப்படும் அ.சா.ஆ.1 புகார் தான் கொடுத்தது தான் என்றும், அதில் உள்ள கையெழுத்து தன்னுடையது தான் என்றும், தானும், தன் மருமகளும் சுமார் 25 நாட்கள் உள்நோயாளியாக சிகிச்சை எடுத்துக்கொண்டார்கள் என்றும், தன் மகள் ஒரு வாரம் உள்நோயாளியாக சிகிச்சை எடுத்துக்கொண்டார் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

**11)** அ.சா.1 தனது குறுக்கு விசாரணை சாட்சியத்தில் "எனக்கு எழுதப்படிக்க தெரியுமா என்றால் தெரியாது. கையெழுத்து மட்டும் தான் போட தெரியும். அதில் என்ன எழுதியுள்ளது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். புகாரில் சம்பவம் எத்தனை மணி, தேதியோ, குறிப்பிட்டு சொல்லப்பட்டுள்ளதா என்றால் பகல் நேரத்தில் சண்டை, மணி குறிப்பிட்டு தெரியாது. புகாரினை யார் எழுதியது என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியாது." என்று

THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Digitally signed by THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Date: 2026.03.25 08:00:57 +0530

குறுக்கு விசாரணை செய்யப்பட்டுள்ளார். எனவே அ.சா.1 தான் புகார் கொடுத்தாரா என்றும், அந்த புகார் மனுவில் அ.சா.1 சொல்லி தான் எழுதப்பட்டதா என்று சந்தேகம் எழுகிறது.

**12)** அ.சா.2 பிரியா தனது சாட்சியத்தில் அ.சா.1 தன் அம்மா என்றும், எதிரிகளை தனக்கு தெரியும் என்றும், அவர்கள் தங்கள் எதிர்வீட்டில் குடியிருந்து வருகிறார்கள் என்றும், கடந்த 30.09.2013-ம் தேதி காலை சுமார் 6 மணியளவில் தங்கள் வீட்டின் முன்பாக தானும், தன் அம்மா அ.சா.1 மற்றும் தன் அண்ணன் மனைவி சோலைமீனா ஆகியோர்கள் இருந்தபோது தங்கமீனாள் என்பவர் கம்பை வைத்து தங்கள் மூவரையும் தலையில் அடித்து இரத்தக்காயத்தை ஏற்படுத்தினார் என்றும், அவர் தங்களை பார்த்து தேவிடியா என்று தகாத வார்த்தை சொல்லி அடித்தார் என்றும், எதிரி ஜோதி செங்கல்லை எடுத்து தங்கள்மீது எறிந்தார் என்றும், எதிரிகள் நந்தினி மற்றும் மஞ்சுளா இருவரும் தகாத வார்த்தைகளால் பேசி, கம்பை வைத்து தங்களை அடித்தார்கள் என்றும், எதிரிகள் தங்கராஜ் மற்றும் கோவிந்தராஜ் இருவரும் தன் அம்மாவை அடித்து, சேலையை உருவி அசிங்கப்படுத்தினார்கள் என்றும், பின்னர் உங்களை இருக்கவிடமாட்டோம், சாகடித்துவிடுவோம் என்றும் தகாத வார்த்தைகளால் பேசி சென்றார்கள் என்றும், பின்னர் தன் அம்மா காவல்நிலையம் சென்று புகார் கொடுத்தார் என்றும், பின்னர் தாங்கள் மூவரும் ராஜாஜி மருத்துவமனையில் உள்நோயாளியாக 15 நாட்கள் சிகிச்சை எடுத்துக்கொண்டார்கள் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

**13)** மேலும் அ.சா.1 தனது குறுக்கு விசாரணை சாட்சியத்தில் "சம்பவத்திற்கு மறுநாள் எனக்கும் 4-வது எதிரி தங்கமீனாவிற்கும் வாய்த்தகராறு ஏற்பட்டது என்றால் சரிதான். இரண்டு சண்டை நடந்ததா என்றால் இல்லை, ஒரு சண்டைதான் நடந்தது." என்று குறுக்கு விசாரணை செய்யப்பட்டுள்ளார். எனவே சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் மறுநாள் சண்டை நடந்ததாக அ.சா.1 சாட்சியம் அளித்துள்ளார். மேலும் எதிரிகளுக்கும், அ.சா.1-க்கும் இடையே ஒரு முறை தான் சண்டை நடந்ததாக சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.2 தனது குறுக்கு விசாரணை சாட்சியத்தில் "நான் முதல் விசாரணையில் 31.09.2013-ல் சம்பவம் நடந்ததாக சொல்லிவிட்டு பின்னர் 30.09.2013 என்று மாறுபட்டு சொன்னேன் என்றால் சரிதான்." என்று குறுக்கு விசாரணை செய்யப்பட்டுள்ளார். எனவே எந்த தேதியில் எப்போது எதிரிகள் அ.சா.1, அ.சா.2 மற்றும் அ.சா.3-ஐ தாக்கினார்கள் என்று அரசு தரப்பில் அ.சா.1-ன் மூலம் நிரூபிக்கவில்லை என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

**14)** அ.சா.3 சோலைமீனா தனது சாட்சியத்தில் அ.சா.1 தன் மாமியார் என்றும், எதிரிகளை தனக்கு தெரியும் என்றும், அவர்கள் தங்கள் எதிர்வீட்டில் குடியிருந்து வருகிறார்கள் என்றும்,

THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Digitally signed by THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Date: 2026.03.25 08:01:03 +0530

கடந்த 30.09.2013-ம் தேதி காலை சுமார் 6 மணிக்குமேல் தங்கள் வீட்டின் முன்பாக தானும், தன் மாமியார் மற்றும் தன் நாத்தனார் அ.சா.2 ஆகியோர்கள் இருந்தபோது தங்கமீனாள் என்பவர் கம்பை வைத்து தன் மாமியாரை அடித்தார் என்றும், தன் மாமியாருக்கு தலையில் காயமிருந்தது என்றும், எதிரி ஜோதி செங்கல்லை வைத்து அ.சா.2-ன் தலையில் அடித்து காயம் ஏற்பட்டது என்றும், எதிரிகள் மஞ்சுளா மற்றும் நந்தினி ஆகிய இருவரும் கட்டையால் தங்கள் மூவரையும் அடித்தார்கள் என்றும், எதிரிகள் அனைவரும் அசிங்கமாக பேசியும், 1-வது எதிரி கோவிந்தராஜ் தன் மாமியாரின் சேலையை பிடித்து இழுத்து அசிங்கப்படுத்தினார் என்றும், மேலும் எதிரி தங்கராஜ் என்பவரும் அசிங்கமாக பேசி தங்களை அடித்தார் என்றும், தனக்கு தலையில் பெரிய காயம் ஏற்பட்டு தையல் போடப்பட்டுள்ளது என்றும், பின்னர் மதுரை அரசு மருத்துவமனையில் உள்நோயாளியாக சேர்ந்து தான் 15 நாட்களும், அ.சா.1 மற்றும் அ.சா.2 14 நாட்கள் உள்நோயாளியாக சிகிச்சை எடுத்துக்கொண்டனர் என்றும், சிகிச்சையிலிருந்தபோது தன் மாமியாரை போலீசார் தன் கணவர் காயம்பட்டு சீரியசாக இருப்பதாக சொல்லி வென்பிளானுடன் வலுக்கட்டாயமாக அழைத்துச் சென்றுவிட்டனர் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

**15)** அ.சா.1 முதல் அ.சா.3 வரையிலான சாட்சியத்தின் அடிப்படையில் எதிரிகள் அ.சா.1, அ.சா.2 மற்றும் அ.சா.3-ஐ தாக்கி அவர்களுக்கு இரத்தக்காயம் ஏற்பட்டதாகவும், அதற்கு அவர்கள் சிகிச்சை எடுத்துக்கொண்டதாகவும் தெரியவருகிறது. ஆனால் அரசு தரப்பில் அ.சா.1 ஆன ஜோதி என்பவர் காயம்பட்டு 30.09.2013-ம் தேதி காலை 9.30 மணிக்கு மேலூர் அரசு மருத்துவமனையில் சேர்ந்ததாகவும், அதன் பின்னர் மருத்துவர்களின் அனுமதியின்றி மருத்துவமனையிலிருந்து சென்றுவிட்டதனால் அவருக்கு ஏற்பட்ட காயம் குறித்து சான்று வழங்க இயலாது என்று விபத்து பதிவேடான அ.சா.ஆ.8-ல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் அ.சா.2 மற்றும் அ.சா.3 காயம்பட்டதாக எந்தவொரு ஆவணமும் அரசு தரப்பில் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. மேலும் அரசு தரப்பு வழக்கின்படி எதிரிகள் அ.சா.1-ஐ தாக்க பயன்படுத்தியதாக சொல்லப்படும் ஆயுதங்களையும் புலன்விசாரணை அதிகாரி கைப்பற்றி இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. எனவே அ.சா.1-க்கு எதிரிகள் தாக்கியதனால் காயம் ஏற்பட்டது என்று அரசு தரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கவில்லை என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

**16)** அ.சா.7 வேலுச்சாமி தனது சாட்சியத்தில் கடந்த 30.09.2013-ம் தேதி கொட்டாம்பட்டி காவல்நிலையத்தில் சிறப்பு சார்பு ஆய்வாளராக பணியிலிருந்த போது ஜோதி என்பவர்

THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Digitally signed by THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Date: 2026.03.25 08:01:07 +0530

கொடுத்த புகாரை பெற்று நிலைய குற்ற எண்.324/2013, இ.த.ச பிரிவுகள் 147, 148, 324, 294(பி), 506(2) மற்றும் 4 of TNPHW Act-ன் கீழ் வழக்கு பதிவு செய்தார் என்றும், அந்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.4 என்றும், முதல் தகவல் அறிக்கையை நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்து ஒரு நகலை தனது விசாரணைக்கு எடுத்துக்கொண்டு அன்றைய தினமே காலை சுமார் 9.00 மணியளவில் சம்பவ இடம் சென்று சாட்சிகள் சதாசிவம், வடிவேல் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு அ.சா.ஆ.5 பார்வை மகஜர் மற்றும் அ.சா.ஆ.6 மாதிரி வரைபடம் தயார் செய்தார் என்றும், பின்னர் பார்வை மகஜர் சாட்சிகள் மற்றும் பிரியா, சோலை, மீனா, நாகம்மாள், பூபதி ஆகியோர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார் என்றும், கடந்த 01.10.2013-ம் தேதி 14.00 மணிக்கு எதிரிகள் கோவிந்தராஜ், தங்கராஜ், ஜோதி, மஞ்சுளா ஆகியோர்களை கைது செய்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினார் என்றும், பின்னர் வழக்கு கோப்பை சார்பு ஆய்வாளரிடம் ஒப்படைத்தார் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

**17)** அ.சா.7 தனது குறுக்கு விசாரணை சாட்சியத்தில் "அ.சா.1 ஜோதி புகார் கொடுக்க வந்தபோது, அவரது உடை கிழிந்திருந்ததா என்றால் எனக்கு ஞாபகமில்லை, அவருக்கு வெளியில் தெரிவதுபோல் அவருக்கு காயம் எதுவும் அப்போது இல்லை.” என்று குறுக்கு விசாரணை செய்யப்பட்டுள்ளார். மேலும் அவர் தனது குறுக்கு விசாரணை சாட்சியத்தில் "அ.சா.1- கொடுத்த புகாரில் என்னென்ன வார்த்தைகளை பயன்படுத்தி எதிரிகள் அவரை வசைபாடினார்கள் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான்.” என்று குறுக்கு விசாரணை செய்யப்பட்டுள்ளார். எனவே எதிரிகள் அ.சா.1-ன் சேலையை இழுத்து அவரை பெண் என்றும் பாராமல் மானபங்கம் படுத்தியதாகவும், அவரை அசிங்கமாக பேசியதாகவும் அ.சா.7-ன் மூலம் அரசு தரப்பில் நிரூபிக்கவில்லை. மேலும் அவ்வாறு அரசு தரப்பில் எந்தவொரு உடையையும் இந்நீதிமன்றத்தில் கைப்பற்றி தாக்கல் செய்யவில்லை.

**18)** அ.சா.8 பிரேம்சந்திரன் தனது சாட்சியத்தில் கடந்த 20.12.2013-ம் தேதி கொட்டம்பட்டி காவல்நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணியில் இருந்தபோது கொட்டாம்பட்டி காவல்நிலைய குற்ற எண்.324/2013 இ.த.ச பிரிவுகள் 147, 148, 324, 294(பி), 506(2) மற்றும் 4 of TNPHW Act-ன் கீழ் பதிவு செய்யப்பட்ட வழக்கில் தான் தனது புலன்விசாரணைக்கு எடுத்துக்கொண்டு சம்பவ இடம் சென்று சாட்சிகளை விசாரித்தார் என்றும், வழக்கில் காயம்பட்ட ஜோதிக்கு சிகிச்சை அளித்த மருத்துவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார் என்றும், காயச்சான்று அ.சா.ஆ.7 என்றும், இத்துடன் தனது புலன்விசாரணை முடித்து 1, 2 எதிரிகள்

THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Digitally signed by THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Date: 2026.03.25 08:01:12 +0530

மீது இ.த.ச பிரிவுகள் 147, 148, 294(பி), 506(2) மற்றும் 4 of TNPHW Act-ன் கீழும், 3 முதல் 5 எதிரிகள் இ.த.ச பிரிவுகள் 147, 148, 324, 294(பி), 506(2)-ன் கீழும், 20.12.2013-ம் தேதியன்று குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தார் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

**19)** எனவே இவ்வழக்கில் அ.சா.1, அ.சா.2 மற்றும் அ.சா.3-ஐ தவிர மற்ற தனிநபர் சாட்சிகள் அனைவரும் அரசு தரப்பு வழக்கிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காமல் பிறழ் சாட்சி ஆகியுள்ள நிலையில் அ.சா.7, அ.சா.8-ன் சாட்சியம் புலன்விசாரணை குறித்து மட்டுமே அமைந்துள்ளது.

**20)** எனவே எதிரிகள் சட்டவிரோதமாக ஒன்று கூடி அ.சா.1, அ.சா.2 மற்றும் அ.சா.3 ஆகியோர்களை அசிங்கமாக பேசி, ஆயுதங்களால் அடித்து சாதாரண காயங்கள் ஏற்படுத்தி, அ.சா.1-ஐ பெண் என்றும் பாராமல் அவரது சேலையை பிடித்து இழுத்து மானபங்கம் படுத்தினார்கள் என்றும், அவர்களுக்கு கொலைமிரட்டல் விடுத்ததாகவும், அரசு தரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கவில்லை என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**21)** முடிவாக, 1 முதல் 6 எதிரிகள் மீது இ.த.ச பிரிவுகள் 147, 148, 294(பி), 324, 506(2) r/w 4 of TNPHW Act-ன் கீழ் சுமத்தப்பட்டுள்ள குற்றங்கள் அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்படவில்லை என்று தீர்மானித்து, சந்தேகத்தின் பலனை 1 முதல் 6 எதிரிகளுக்கு அளித்து அவர்கள் குற்றவாளிகள் இல்லை என இந்நீதிமன்றம் முடிவு செய்து, குவிமுச பிரிவு 248(1)-ன் கீழ் 1 முதல் 6 எதிரிகளை விடுதலை செய்து, இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.

**22)** இவ்வழக்கில் வழக்கு சொத்துக்கள் எதுவும் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. அதனால் அது பற்றி உத்தரவு எதுவும் பிறப்பிக்கவில்லை.

**23)** மேலும் 1 முதல் 6 எதிரிகள் குவிமுச பிரிவு 437(A)-ன் கீழ் எழுதிக்கொடுத்துள்ள பிணைப்பத்திரம் 6 மாதங்கள் முடிவடைந்த பின்பு தானாக ரத்தாகிவிடும்.

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு நீதிமன்ற கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு திறந்த நீதிமன்றத்தில் இன்று 2026-ம் ஆண்டு மார்ச் மாதம் 25-ம் தேதி அவையறிய பகரப்பட்டது.

THENDRAAL MUTHU DAKSNAMOORTHY

Digitally signed by THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Date: 2026.03.25 08:01:18 +0530

நீதித்துறை நடுவர்,
மேலூர்.

<u>இணைப்பு</u>

<u>அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகள்</u> :-

| வரிசை எண் | விசாரிக்கப்பட்ட தேதி | சாட்சிகளின் பெயர்கள் |
|---|---|---|
| அ.சா.1 | 12.10.2021 | ஜோதி |
| அ.சா.2 | 12.10.2021 | பிரியா |
| அ.சா.3 | 12.10.2021 | சோலைமீனா |
| அ.சா.4 | 12.10.2021 | நாகம்மாள் |
| அ.சா.5 | 12.10.2021 | சதாசிவம் |
| அ.சா.6 | 12.10.2021 | வடிவேல் |
| அ.சா.7 | 20.11.2024 | வேலுச்சாமி |
| அ.சா.8 | 30.12.2024 | பிரேம்சந்திரன் |
| அ.சா.9 | 04.02.2026 | பூபதி |

<u>அரசு தரப்பில் குறியிடப்பட்ட சான்றாவணங்கள்</u> :-

| வரிசை எண் | குறியீடு செய்த சாட்சி | ஆவணங்களின் விபரங்கள் |
|---|---|---|
| அ.சா.ஆ.1 | அ.சா.1 | புகார் |
| அ.சா.ஆ.2 | அ.சா.5 | பார்வை மகஜரிலுள்ள அ.சா.5-ன் 1-வது சாட்சி கையொப்பம் |
| அ.சா.ஆ.3 | அ.சா.6 | பார்வை மகஜரிலுள்ள அ.சா.6-ன் 2-வது சாட்சி கையொப்பம் |
| அ.சா.ஆ.4 | அ.சா.7 | முதல் தகவல் அறிக்கை |
| அ.சா.ஆ.5 | அ.சா.7 | பார்வை மகஜர் |
| அ.சா.ஆ.6 | அ.சா.7 | மாதிரி வரைபடம் |
| அ.சா.ஆ.7 | அ.சா.7 | காயச்சான்று |

THENDRAAL MUTHU DAKSNAMOORTHY

Digitally signed by THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Date: 2026.03.25 08:01:23 +0530

அரசு தரப்பு சான்றுப்பொருட்கள்:- இல்லை

**1** முதல் **6** எதிரிகள் தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகள்,

குறியீடப்பட்ட சான்றாவணங்கள் மற்றும் சான்று பொருட்கள்: இல்லை

குறிப்பு

1) வழக்கு விசாரணைகாலத்தில், 1 முதல் 6 எதிரிகள் நீதிமன்ற பிணையிலிருந்துள்ளார்கள்.

2) எந்தவொரு சாட்சியும் 3 தினங்களுக்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை.

3) வழக்கின் முடிவு காவல்துறைக்கு தெரிவிக்கப்பட்டது

4) தீர்ப்பின் நகல், மாண்புமிகு தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவருக்கு பணிந்து சமர்ப்பிக்கப்பட்டது.

THENDRAAL MUTHU DAKSNAMOORTHY

Digitally signed by THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Date: 2026.03.25 08:01:27 +0530